




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வியாழன் ❖ ஜூன். 15, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 251 ❖ ரூ.10


## மோசடி வழக்கில் கைது-இலாகா இல்லாத அமைச்சர் ஆகிறார் செந்தில்பாலாஜி?

# டம்மி

## துறைகளை மற்ற அமைச்சர்களிடம் வழங்க திட்டம்: 28-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஜூன். 15-**

**அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில்பாலாஜி, இலாகா இல்லாத அமைச்சராக தொடர வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், அவரது துறைகளை மற்ற அமைச்சர்களிடம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.**

சென்னை மற்றும் கரூரில் உள்ள மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜியின் வீடு அவரது சகோதரர் அசோக்குமார் வீடு மற்றும் நண்பர்கள் வீடு என 10 இடங்களில் நேற்று முன்தினம் (ஜூன் 13) அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதனைத் தொடர்ந்து, தமிழக மின்துறை அமைச்சர் செந்தில்பாலாஜியை அமலாக்கத் துறை கைது செய்துள்ளது. மேலும், செந்தில் பாலாஜியை 28-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்ட காரணத்தால் சென்னை - ஓமந்தூரார் பல்நோக்கு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். மேலும், நெஞ்சுவலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு பைபாஸ் அறுவை சிகிச்சைசெய்யமருத்துவக் குழுவினர் பரிந்துரை செய்துள்ளனர். இதன் காரணமாக, மீண்டும்



தமிழக அமைச்சரவையில் மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு கடந்த 2021 மே 7-ம் தேதி பொறுப்பேற்றது. கடந்த ஆண்டில் அமைச்சரவையில் முதன்முதலாக மாற்றம் செய்யப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக ராஜகண்ணப்பன் பொறுப்பேற்றார். அவரிடம் இருந்த போக்குவரத்து துறை, சிவசங்கருக்கு மாற்றப்பட்டது. பிறகு, அமைச்சரவையில் உதயநிதி ஸ்டாலின் சேர்க்கப்பட்டார். அவருக்கு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு, வறுமை ஒழிப்பு, சிறப்பு திட்ட செயலாக்கத் துறைகள் அளிக்கப்பட்டன. அதேநேரம், கூட்டுறவு துறை, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றப்பட்டன. இது தவிர, வீட்டுவசதி துறையில்இருந்துசிஎம்டிஏ பிரிக்கப்பட்டு, அறநிலைய துறை அமைச்சர் சேகர்பாபுவிடம் தரப்பட்டது.

தமிழகத்தில் திமுக ஆட்சி அமைந்து 2 ஆண்டுகள் முடிந்த நிலையில், அமைச்சரவையில் கடந்த மே மாதம் 3-வது முறையாக மாற்றம் செய்யப்பட்டது. பால்வளத் துறை அமைச்சராக இருந்த சா.மு.நாசர் நீக்கப்பட்டு, அவருக்குப் பதில் மன்னார்குடி எம்எல்ஏ டி.ஆர்.பி.ராஜா அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார். மேலும், அமைச்சர்களின் பொறுப்புகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

டிஆர்பி.ராஜாவுக்கு, அமைச்சர் தங்கம் தென்னரசு கவனித்து வந்த தொழில் துறை ஒதுக்கப்பட்டது. பிடி ஆர்.பழனிவேல் தியாகராஜன் கவனித்து வந்த நிதி, திட்டம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகால பலன்கள், புள்ளியியல் ஆகிய துறைகள் தங்கம் தென்னரசுவுக்கு வழங்கப்பட்டன. மேலும், தொல்லியல் துறையும் கூடுதலாக வழங்கப்பட்டது.

அமைச்சர் தங்கம் தென்னரசு வசமிருந்த தமிழ் வளர்ச்சி, தமிழ் ஆட்சி மொழித் துறை ஆகியவை செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வசம் ஒப்படைக்கப்பட்டது. அமைச்சர் த.மனோ தங்கராஜ் கவனித்து வந்த தகவல் தொழில்நுட்பத் துறை, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜனுக்கும், அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்ட நாசர் கவனித்து வந்த பால்வளத் துறை மனோ தங்கராஜுக்கும் வழங்கப்பட்டது.

இந்நிலையில், அமலாகத் துறையால் அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டுள்ள காரணத்தால், 4-வது முறையாக அமைச்சரவையில் மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன்படி, அமைச்சர் செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக தொடர வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், அவரது துறைகள் மற்ற அமைச்சர்களிடம் வழங்க வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் செந்தில்பாலாஜியிடம் மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆகிய துறைகள் உள்ளன. இவற்றில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை அமைச்சர் ஐ.பெரிசாமிக்கும், மின்சாரம், மரபு சாரா எரிசக்தி மேம்பாட்டுதுறையை அமைச்சர் தங்கம் தென்னரசுவிடமும் கூடுதல் பொறுப்பாக வழங்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## புதுக்கோட்டை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் சு.திருநாவுக்கரசர் தலைமையில் நடைபெற்றது




**புதுக்கோட்டை , ஜூன். 15-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுத் தலைவர் மற்றும் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் சு.திருநாவுக்கரசார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குபின் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஒன்றிய அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டுவரும் 45 திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியரகத்தில் அலுவலர்களுடன் இன்றையதினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இக்கூட்டத்தில் பிரதம மந்திரி நுண்ணீர் திட்டம், பாரதபிரதமரின் கிஸான் சம்மான் நிதித் திட்டம், மண்வள அட்டை இயக்கம், பிரதான் மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம், பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், தேசிய வேளாண்மை வளர;ச்சித் திட்டம், பிரதம மந்திரி விவசாய நீர்பாசனத் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் - தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம், தேசிய வேளாண்மை வளா;ச்சித் திட்டம், பிரதம மந்திரி நுண்ணீர; பாசனத் திட்டம், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம், மின்னணு தேசிய வேளாண் சந்தை, ஊரக மின் மயமாக்கல் திட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்திட்டம், தேசிய சுகாதார இயக்கம், பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா, தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் மிசன், மதிய உணவுத் திட்டம் உள்ளிட்ட 45 திட்டப் பணிகள் விபரங்கள், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரம், செலவு செய்யப்பட்ட நிதிவிபரம், பணி முன்னேற்றம் மற்றும் நடைபெற்று வரும் பணிகள், முடிவுற்றப் பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறும் வகையில் பரவலாக மேற்கொள்ளவும், அரசின் திட்டங்கள் ஏழை, எளிய பொதுமக்களை சென்றடையும் வகையில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு திட்ட இயக்குநர் ரேவதி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## சரக்கு வாகனத்தில் கஞ்சா கடத்தல்: புதுக்கோட்டை போலீசாருக்கு தண்ணி காட்டிய கடத்தல் கும்பல்

**புதுக்கோட்டை , ஜூன். 15-**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆந்திரா பதிவு எண் கொண்ட சரக்கு வாகனத்தில் 450 கிலோ கஞ்சா கடத்தல் வாகனத்தில் வந்தவர்கள் நைசாக தப்பி ஓடிவிட்டதால் போலீசார் அதிர்ச்சியடை ந்துள்ளனர்.**



புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே நேற்று முன்தினம் இரவு ரோந்துப் பணியின் போது கீரனூர் - திருச்சி பிரதானச் சாலையில் சென்ற போது ஆந்திர பதிவு எண் கொண்ட ஒரு சரக்கு வாகனம் செல்வதைப் பார்த்து நெடுஞ்சாலை ரோந்து போலிசாரிடம் தகவல் கொடுத்து அந்த வாகனத்தை நிறுத்தக் கூறியுள்ளார். அந்த வாகனத்தை நிறுத்திய நெடுஞ்சாலை ரோந்து போலிசார் கீரனூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சரக்கு வாகனத்தில் காய்கறி மூட்டைகள் கிடப்பதைப் பார்த்த கீரனூர் போலிசாரிடம் நாங்கள் தூத்துக்குடிக்கு காய்கறி ஏற்றி வருகிறோம் என்று கூறி தூத்துக்குடி முகவரியும் கொடுத்துள்ளனர். காலை வந்து வாகனத்தை எடுத்துக் கொள்வதாக கூறியதும் போலிசார் அந்த நபர்களை அனுப்பி வைத்தனர். நேற்று காலை வெகுநேரமாகியும் அவர்கள் வராததால் காய்கறி வாகனத்தை சோதனை செய்த போலிசாருக்கு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. முக்கால் பகுதிக்கு முழுமையாக தகரம் அடித்து மறைத்திருந்த வாகனத்தில் கொஞ்சம் காய்கறி மூட்டைகளுக்கு கீழே உள்ள மூட்டைகளில் கஞ்சா பண்டல்களை கண்டுபிடித்துள்ளனர். சுமார் 450 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அதன் பிறகு போலிசாரை ஏமாற்றிவிட்டு தப்பிச் சென்றவர்கள் கொடுத்த செல்போன் எண்களுக்கு தொடர்பு கொண்டால் சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தது. இந்த தகவல் அறிந்து கீரனூர் டிஎஸ்பி உள்ளிட்ட போலிசார் விசாரணை செய்து வருகின்றனர். மாவட்ட காவல்கண்காணிப்பாளர் பிடித்துக்கொடுத்த கஞ்சா கடத்தல்காரர்களை தப்பவிட்ட போலிசார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்களோ? தப்பிச் சென்றவர்களை எப்படி பிடிப்பது? என்பது பற்றி போலிசார் ஆலோசனை செய்து வருகின்றனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கலைஞர் பிறந்தநாள் விழா

## நெடுஞ்சாலைத்துறை திருமயம் கோட்டத்தில் மரம் நடும்விழா

**திருமயம் , ஜூன். 15-**

**தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் நெடுஞ்சாலைத்துறை கோட்டத்தில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது.**

முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் தொடக்க விழாவினை தஞ்சாவூர் மானமதுரை சாலையில் நெடுஞ்சாலைத்துறை திருமயம் உதவிக் கோட்டப் பொறியாளர் எஸ்.சண்முகசுந்தரபூபதி தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் சிறப்பு விருந்தினராக



தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் தீபாதேவி, திருமயம் ஊராட்சி மன்றத் தலைவர் சிக்கந்தர் திருமயம் தீரர் சத்தியமூர்த்தி கிளை நூலக அலுவலர் மாலதி மற்றும் உதவிப் பொறியாளர்கள் கார்த்திகேயன், உதவிப் அபுதாஹீர் இளநிலைப்பொறியாளர் இரவீந்திரன் மற்றும் சாலை ஆய்வாளர்கள், சாலைப்பணியாளர்கள் கலந்துக்கொண்டார்கள்.

அதே போல் தஞ்சாவூர் - சாயல்குடி சாலையில் நடைப்பெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக கழனிவாசல் மேல்நிலைப்பள்ள தலைமையாசிரியர் ஜெயந்தி கைக்குளான்வயல் ஊராட்சி மன்றத் தலைவர் சாந்திகுமார், கும்மங்குடி ஊராட்சி மன்றத் தலைவர் பழனியம்மாள்முருகன் தமிழ்நாடு கிராம நிர்வாகவங்கி மேலாளர் சீனிவாசன், காசாளார் மகாவிநாயகம் மற்றும் உதவிப் பொறியாளர் கார்த்திகேயன், இளநிலைப்பொறியாளர் இரவீந்திரன் மற்றும் பலர் கலந்துக் கொண்டார்கள்.

## செந்தில்பாலாஜியை 15 நாட்கள் காவலில் விசாரிக்க கோரிய அமலாக்கத் துறை மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

**சென்னை , ஜூன். 15-**

**செந்தில்பாலாஜியை 15 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி அமலாக்கத் துறை தாக்கல் செய்த மனு மீதான விசாரணையை இன்றைக்கு ஒத்திவைத்து சென்னை முதன்மை அமர்வுநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

சட்டவிரோத பண பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் அமைச்சர் செந்தில்பாலாஜியை வரும் 28-ம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து, திமுக சார்பில் செந்தில்பாலாஜிக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற காவலை நிராகரிக்க கோரியும், ஓமந்தூரார் மருத்துவமனையில் இருக்கும் அவர் காவேரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்ய அனுமதிக்க கோரியும், செந்தில்பாலாஜிக்கு இடைக்கால ஜாமீன் வழங்க கோரியும் சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதேபோல், செந்தில்பாலாஜியை 15 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி அமலாக்கத் துறை சார்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதி அல்லி முன்பு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது செந்தில்பாலாஜி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, செந்தில்பாலாஜியின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவருக்கு இடைக்கால ஜாமீன் வழங்க வேண்டும். ஏற்கெனவே விசாரணை என்ற பெயரில் 22 மணி நேரம் துன்புறுத்தப்பட்டுள்ளார். எனவே, அவருக்கு அறுவை சிகிச்சை செய்வதற்காக காவேரி மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

அப்போது, அமலாக்கத் துறை தரப்பில், சட்டவிரோத பணப் பரிமாற்ற சட்டத்தைப் பொறுத்தவரை, குற்றவியல் நடைமுறை சட்ட விதிகள் பொருந்தாது. கைதுக்கான மெமோவை பெற செந்தில்பாலாஜி மறுத்துவிட்டார். நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அவர் அதை நிராகரிக்க கோர முடியாது என்று வாதிடப்பட்டது.

இதையடுத்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி, 15 நாட்கள் செந்தில்பாலாஜியை காவலில் வைத்து விசாரிக்க வேண்டும் என்று அமலாக்கத் துறை தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணையை இன்றைக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார். காவலில் எடுக்க கோரிய மனு மீதான விசாரணை நிலுவையில் இருப்பதால், இடைக்கால ஜாமீன் கோரிய மனு மீது நீதிபதி எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**சோகங்கள் நமக்குச் சொந்தமானது அல்ல. அதைத் தக்க வைத்துக் கொள்வதும் தகர்த்தெறிவது அவரவர் துணிவில் தான் இருக்கிறது.**






புதுக்கோட்டை குளத்தூர் மகாத்மா மழலையர் தொடக்கப் பள்ளியில்

# மகிழ்ச்சியுடன் வருகை தந்த மழலையர்கள் நெற்றியில் திலகமிட்டு வரவேற்ற ஆசிரியர்கள்



புதுக்கோட்டை, ஜூன்.15-

புதுக்கோட்டை குளத்தூர் மகாத்மா மழலையர் தொடக்கப்பள்ளியில் கோடை விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிக்கு உற்சாகமாக மகிழ்ச்சியுடன் மழலையர்கள் மாணவ, மாணவியர்கள் வருகை தந்தனர். வருகை புரிந்த அனைத்து மழலையர்களுக்கும் மாணவர்களுக்கும் பள்ளியின் தாளாளர் டி.ரவிச்சந்திரன் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் வரவேற்றனர் .

ஆசிரியர்கள் மழலையர்களின் நெற்றியில் திலகமிட்டு இனிப்புகள், கொடுத்து . புன்னகையுடன் வரவேற்றனர் பழைய புதிய மாணவ, மாணவியர்கள் மழலையர்கள் தங்களது வகுப்புகளில் அமர்ந்து நட்பை பரிமாறிக்கொண்டனர். அனைவருக்கும்2023-24 கல்வி ஆண்டுக்கான அனைத்து புத்தகங்களையும் சீருடைகளையும் பள்ளியின் தாளாளர் டி.ரவிச்சந்திரன் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் வழங்கினர், பின்னர் பள்ளியின் விளையாட்டு வளாகத்தில் விளையாடி மகிழ்ந்தனர் பள்ளிக்கு பெற்றோர்களும் திரளாக வருகைதந்தனர்.

# ஜெயங்கொண்டம் அருகே நெடுஞ்சாலைத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடும் திட்ட தொடக்க விழா



அரியலூர், ஜூன்.15-

ஜெயங்கொண்டம் அருகே, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நெடுஞ்சாலை துறை சார்பில், மரக்கன்றுகள் நடும் திட்ட தொடக்க விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், நெடுஞ்சாலைத்துறை ஜெயங்கொண்டம் உபகோட்டம் சார்பில், கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அங்கராயநல்லூர் கிராமத்தில் 5000 மரக்கன்றுகள் நடுதல் திட்டத்தை, சட்டமன்ற உறுப்பினர் க.சொக. கண்ணன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அரியலூர் கோட்ட பொறியாளர் உத்தண்டி,ஜெயங்கொண்டம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் தன.சேகர், உதவி கோட்ட பொறியாளர் பி.கருணாநிதி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) செந்தில்குமார், உதவி பொறியாளர் விக்னேஷ்ராஜ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அழகானந்தம், கண்காணிப்பாளர் செந்தில், சாலை ஆய்வாளர்கள் கவிதா, சுமத்ரா, சுஜாதா, மரியசூசை, ஒன்றிய அவைத்தலைவர் குணசேகரன், திமுக கிளை செயலாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.






# மதுரை மாவட்ட கோவில் பூசாரிகள் நலச்சங்க மாநாடு



மதுரை,ஜூன்.15-

மதுரை தனியார் திருமண மண்டபம் புதூர் மார்க்கெட் அருகில் மதுரை மாவட்ட கோவில் பூசாரிகள் நலச்சங்க மாநாடு மாநிலத் தலைவர் வாசு பூசாரி தலைமையில் நடைபெற்றது. இதில் கோவில் பூசாரிகள் ஓய்வு ஊதியம், ரூபாய் 4000-ம் ஆக உயர்த்தியதும், திருக்கோயில்களில் பணியாற்றும் பூசாரிகளுக்கு முதல் முறையாக ரூபாய் ஆயிரமும் ஊக்கத்தொகையும் திருக்கோவில்களில் நிலங்கள் மீட்பு ஆதிதிராவிடர் திருக்கோவில்களை சீரமைக்க திருப்பணி நிதி உயர்வு உள்ளிட்ட பல்வேறு நல வாழ்வு திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்ற பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி, அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

படத்தில் மாநில செயலாளர் சங்கர், மாநில துணைத்தலைவர் கணேசன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜா, மாவட்ட பொருளாளர் கணேசன், மாவட்ட செயலாளர் முருகன், புதூர் மாரியம்மன் கோவில் மதுரை மாவட்டத் தலைவர் பத்மநாபன், ஆலோசனை குழுத் தலைவர் மணிகண்டன், சிறப்பு விருந்தினராக திமுக வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ. தளபதி, மதிமுக தொண்டரணி அமைப்பாளர் பாஸ்கர சேதுபதி, பழ கருப்பையா, சீனிவாசன், சபரிராயன் அந்தோணி தாஸ் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டம் ஆண்டி மடத்தில் ஜமாபந்தி நிறைவு



அரியலூர்,ஜூன்.15-

ஆண்டிமடத்தில்ஜமாபந்திநிறைவடைந்தது. அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தாலுகா அலுவலகத்தில், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன் தலைமையில், ஜமாபந்தி எனப்படும் வருவாய் தீர்வாயம் நடைபெற்றது. தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த ஜமாபதியில், ஆண்டிமடம் மற்றும் குவாகம் பிர்காவுக்கு உட்பட்ட பொதுமக்கள் கொடுத்த பல்வேறு மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ள மனுக்கள்மீதுகாணப்பட்டது.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் பலரும் பேசினார்கள், விவசாயிகள் கோரிக்கைகளுக்கு பதில் அளித்து ஜமாபந்தி அலுவலர்ரவிச்சந்திரன் பேசினார்.

இதில் ஆண்டிமடம் தாசில்தார் இளவரசன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் அமுதா, ஆதிதிராவிடர் நல தாசில்தார் ஆனந்தன், துணை தாசில்தார் பார்த்திபன், வருவாய் ஆய்வாளர்கள் ஆண்டிமடம் ரமேஷ், குவாகம் ஜெனிபர், மற்றும் பல்வேறு அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கந்தர்வகோட்டை அருகே தெற்கு வாண்டான் விடுதி தொடக்கப் பள்ளியில் மரக்கன்று வழங்கி மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு



கந்தர்வகோட்டை, ஜூன்.15-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் தெற்கு வாண்டான் விடுதி தெற்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு பள்ளி தொடங்கிய நாளில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு மரக்கன்று வழங்கி மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு ஊராட்சி மன்றத் தலைவர் அருணாசலம் தலைமை வகித்தார், தலைமை ஆசிரியர் சின்னராஜா அனைவரையும் வரவேற்றார், பள்ளி மேலாண்மை குழுத் தலைவி பேபி ஷாலினி முன்னிலை வகித்தார், இந்நிகழ்வில் கலந்து கொண்ட இல்லம் தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா பேசும்போது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அரசு பள்ளியில் சேர்க்கவேண்டும்எனவும், அரசு பள்ளியில் மாணவர்களுக்காக காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் இல்லம் தேடி கல்வி திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் சிறப்பான முறையில் கற்பிக்கப்பட்டு வருகிறது என பேசினார். இந்நிகழ்வில் முத்தையன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஊர் பொதுமக்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.நிறைவாக ஜாய்சி ராணி நன்றி கூறினார்

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியில் துவக்க நாளில் எல்.கே.ஜி. குழந்தைகளுக்கு பிரம்மாண்ட வரவேற்பு



புதுக்கோட்டை, ஜூன்.15-

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வேறெங்கும் இல்லாத அளவிற்க்கு புதுமையாக ஒவ்வொரு ஆண்டும் பள்ளி துவங்கும் நாளில் எல்.கே.ஜி. குழந்தைகளை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறும். அந்த வகையில் 2023—24 ல் புதிய கல்வி ஆண்டின் பள்ளி துவக்க நாளில் பள்ளியின் வாசலில் பலூன் தோரணங்கள் கட்டி மேளதாளத்துடன் எல்.கே.ஜி. குழந்தைகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

புத்தம்புது பட்டாம் பூச்சிகளாகப் பறந்து வருகின்ற எல்.கே.ஜி. குழந்தைகளை வரவேற்கும் நிகழ்வாக பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி; மழலைச்செல்வங்களுக்கு மலர் மாலை அணிவித்தார் மாணவர்களே ரிப்பன் வெட்டி முதல் நாள் பள்ளியில் அடியெடுத்து வைத்தனர். ஆசிரியர்கள் பூங்கொத்து, சாக்லேட், பஞ்சுமிட்டாய் மற்றும் புதிய வாட்டர் பாட்டில் கொடுத்து ஆராத்தி எடுத்து மாணவர்களையும் பெற்றோர்களையும் இன்முகத்துடன் வரவேற்றனர்.

குழந்தைகளுக்கு சாக்லேட்டுகள் மற்றும் பஞ்சுமிட்டாய்கள் வழங்கப்பட்டன. சவ்வு மிட்டாயில் குழந்தைகளுக்கு கடிகாரம் மோதிரம் போன்றவைகளை செய்து வழங்கியது குழந்தைகள் மற்றும் பெற்றோர்களை மிகவும் கவர்ந்தது. குழந்தைகளை 'மிக்கி மௌஸ் பொம்மைகள்' கைகுலுக்கி வகுப்புக்கு அழைத்துச்சென்றன. விழாவில் பள்ளியின் மேலாண்மை இயக்குனர் நிவேதிதா மூர்த்தி, துணைமுதல்வர் குமாரவேல், ஒருங்கிணைப்பாளர்கள்; கௌரி, அபிராமசுந்தரி, வரலெட்சுமி, கோமதி, மேலாளர் ராஜா, ஆசிரியர்கள் கணியன் செல்வராஜ், உதயகுமார், காசாவயல் கண்ணன் மற்றும் ஆசிரியப்பெருமக்கள் கலந்துகொண்டு முதல் நாள் பள்ளிக்கு வந்த மழலைச் செல்வங்களை வரவேற்று வாழ்த்தினர்.

# செங்கோட்டையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழா



தென்காசி, ஜூன். 15-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் ஆணைக்கிணங்க,

தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன் அறிவுறுத்துதலின் பேரில் செங்கோட்டை நகர திமுக மற்றும் நகர விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் மாபெரும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்விழாவில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு செங்கோட்டை நகர திமுக செயலாளர் வழக்கறிஞர்

ஆ.வெங்கடேசன் தலைமை வகித்தார்,செங்கோட்டை ஒன்றிய செயலாளர் ஆ.ரவிசங்கர், செங்கோட்டை நகர நிர்வாகிகள் காளி, ஜோதிமணி, தில்லை கே. நடராஜன், ஆ.பாஞ்ச் பீர்முகம்மது, லெ.சுப்பிரமணியன், பொ.மணிகண்டன் கலைஞர் தமிழ்ச் சங்க செயலாளர் மு.ஆபத்துக்காத்தான் பொதுக்குழு உறுப்பினர் ரஹீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரெட் சரவணன் வரவேற்புரை ஆற்றினார், தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பொ.சிவபத்மநாதன் பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார் முதல் பரிசு செங்கோட்டை ரெட் ரோஸ் குழுவினரும், இரண்டாம் பரிசு தாட்கோ நகர் ஏ எம் கே எஸ் அணியினரும், மூன்றாம் பரிசு வம்பளந்தான் முக்கு டிராகன் பாய்ஸ் அணியினரும், நான்காம் பரிசு கதிரவன் காலனி கே.சி. வாரியர்ஸ் அணியினரும் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பி.எஸ் மாரியப்பன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் மோகன், சுப்பிரமணியன், குற்றாலம் பேரூர் திமுக செயலாளர் குட்டி என்ற சங்கர், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காதர் அண்ணாவி, மாவட்ட மகளிர் அணித் தலைவர் பேபி ரஜப் பாத்திமா, பொறியாளர் அணி அமைப்பாளர் சொ.கருப்பணன் விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் நசீர் வார்டு கழக நிர்வாகிகள் ஆ.சண்முகராஜா, மாரியப்பன், இப்ராகிம்,சேட் (எ)சேக்மதார்,வேலுமணிவிஜி என்ற விஜயபாரதன், பேச்சாளர் செங்கை குத்தாலிங்கம்,புலவர் மணிகண்டன் பிரதிநிதிகள் கல்யாணி, நாகூர்கனி, நாட்டாமை ஆறுமுகம், ஆ.சங்கர்கணேஷ், கொக்கரக்கோ கோவிந்தன், ராமகிருஷ்ணன், காளி,ஐயம் பெருமாள், காந்திபாபு, மணிகண்டன், ஆறுமுகத்தேவர், ஜான்சன், நகர்மன்ற உறுப்பினர் இசக்கித்துரை பாண்டியன், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சந்துரு என்ற சங்கரலிங்கம் கே.ஆர் மோகன், நீராத்திலிங்கம், பாலசந்தர்,கார்த்திக், தனுஷ், ஹரிஷ்,ஆனந்த், கணேசன் ,சிவா, திருமால்,தங்கையா, குமார், பரமசிவன், தங்கராஜ், ஆறுமுகம், சிவகுமார், ஆர்பிஎப் மணி, ரவிக்குமார், ஆசிரியர் மாடசாமி, பரமசிவன்,சந்தோஷ், காலித், தளபதி சுரேஷ்,செல்வராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர், முடிவில் தீயணைப்புத்துறை செந்தில் நன்றி கூறினார்.

# ஆவுடையார்கோவில் அருகே திருப்புனவாசல் வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம்



ஆவுடையார்கோவில், ஜூன்.15- '

புதுக்கோட்டை மாவட்டம் , ஆவுடையார்கோவில் தாலுகா, திருப்புனவாசல் வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

முகாமில் 648 பயனாளிகளுக்கு, 1.05 கோடி மதிப்பீட்டில் தையல் மிசின், உழவுஇயந்திரம், பூச்சிமருந்து அடிக்கும் தெளிப்பான், சலவை தொழிலாளிக்கு இஸ்திரி பெட்டி உள்பட மீனவர் பயன்படுத்தும் குளிர்சாதன பெட்டி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும் இலவச வீட்டு மனை பட்டா உள்பட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

அப்போது அவரிடம் திருப்புனவாசலை சுற்றியுள்ள பகுதியில் குடிதண்ணீருக்கா ஆழ்குழாய்கிணறு அமைத்தும் நல்ல தண்ணீர் கிடைப்பதில்லை என்றும் கூறினார்கள் . மேலும் கவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் குடிதண் ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். முன்னதாக முகாமில். மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சுகாதாரத்துறை, வேளாண்மை துறை, வேளாண் பொறியியல் துறை சார்ந்து ஸ்டால்கள் அமைக்கப்பட்டிருந்தது.

பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட ஸ்டால்களைமாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார், நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி, கோட்டாட்சியர் சொர்ணராஜ், ஒன்றியக்குழுத் தலைவர் உமாதேவி, ஆவுடையார்கோவில் தாசில்தார் மார்ட்டின் லூதர் கிங், முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் துரைமாணிக்கம். ஒன்றியக்குழு உறுப்பினர்கள் செந்தில்குமரன், சுந்தரபாண்டியன், பாண்டி திருப்புனவாசல்ஊராட்சி மன்றத் தலைவர் மலர் நல்லதம்பி மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், பயனாளிகள் உட்பட500க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# சேகுவாரா பிறந்தநாளை முன்னிட்டு மரக்கன்றுகள் வழங்கும் விழா



புதுக்கோட்டை, ஜூன்.15-

சேகுவாராவின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டையில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சார்பில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் நேற்று மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

புரட்சியாளர் சேகுவாராவின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை சின்னப்பாபூங்கா அருகில் வைக்கப்பட்டிருந்த அரவது புகைப்படத்திற்கு இந்தியஜனநாயகவாலிபர் சங்கத்தின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

வாலிபர் சங்கத்தின் நகரச்செயலாளர் ஜெகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், துணை தலைவர் நித்திஸ்குமார், நகர குழு உறுப்பினர்கள் தீபக், உதயநிதி, சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜி.நாகராஜன், நகரச் செயலாளர் ஆர்.சோலையப்பன், நகரக்குழு உறுப்பினர் எம்.ஏ.ரகுமான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

### திருநள்ளாறு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்

# மாணவிகளுக்கு பன்னீர் தெளித்து சந்தனமிட்டு இனிப்புகள் வழங்கி வரவேற்ற ஆசிரியர்கள்



காரைக்கால்,ஜூன்,15

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் கோடை விடுமுறை காரணமாக அரசு மற்றும் தனியார் பள்ளிகள் விடுமுறை விடப்பட்டு நேற்று திறக்கப்பட்டது. இந்த நிலையில் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் வருகை புரிந்தனர். பள்ளி நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களை சந்திக்க ஆர்வத்துடன் வருகை புரிந்த மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி ஆசிரியர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

மேலும் திருநள்ளாறு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருமணத்தில் விருந்தாளிகளை அழைப்பது போல் மாணவிகளுக்கு பன்னீர் தெளித்து சந்தனம் இட்டு பூ கற்கண்டு இனிப்புகள் வழங்கி வரவேற்ற ஆசிரியர்களால் பள்ளி மாணவிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

புதுச்சேரி மாநிலத்தில் தமிழக பாடத்திட்டத்தை பின்பற்றி பள்ளிகள் நடைபெற்ற வந்த நிலையில் இந்த ஆண்டு முதல் மத்திய அரசின் சிபிஎஸ்இ பாடத்திட்டம் புதுச்சேரி மாநிலத்தில் அமலுக்கு வந்து நேற்று முதல் தொடங்கியது. மேலும் மாணவர்களுக்கு தண்ணீர் குடிப்பதற்காக பள்ளி நேரத்தில் மூன்று முறை வாட்டர் பெல் அடிக்க புதுச்சேரி கல்வித்துறை அறிவுறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.



காரைக்கால் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட கோத்துக்குளம் உயர்நிலை பள்ளி, முருகாத்தாள் ஆச்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் கோவிந்தசாமிபிள்ளை உயர்நிலைப்பள்ளியில் கடந்த ஆண்டு 9- வகுப்பு படித்த மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டி மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் சீருடை ,தையற்கூலி, நோட்டு புத்தகம் ஆகியவற்றை சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம்.எச் நாஜிம், வழங்கியபோது ... இந்த நிகழ்வில் பள்ளி முதல்வர் ,பெற்றோர் சங்க கூட்டமைப்பு சேர்ந்தவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் .

# தமிழகத்தில் இன்று முதல் 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன்15-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- மேற்கு திசை காற்று மற்றும் வெப்ப சலனம் காரணமாக இன்று முதல் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

15.06.2023 (இன்று ) மற்றும் 16.06.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

17.06.2023 மற்றும் 18.06.2023:தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 40-41 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.

அதிகபட்ச வெப்பநிலை:-

14.06.2023 முதல் 16.06.2023 வரை: தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி முதல் 41 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்; ஒருசில இடங்களில் இயல்பிலிருந்து 2 -4 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது வெப்ப அழுத்தம் காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராள்ளப்பாடி கிராமத்தில் உள்ள ஸ்ரீ கங்கை அம்மன் கோவிலின் 3-ம் ஆண்டு ஜாத்திரை திருவிழா



ஊத்துக்கோட்டை, ஜூன்15-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருகே குமரப்பேட்டை ஊராட்சியை சேர்ந்த ராள்ளப்பாடி கிராமத்தில் ஸ்ரீ கங்கை அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் 3-ம் ஆண்டு ஜாத்திரை திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதை முன்னிட்டு பூக்களால் அலங்கரிக்கப்பட்ட கரகம் ஏழு ஊரு எல்லையை மிதிக்கும் நிகழ்ச்சியும், பெரியபாளையம் பவானி அம்மன் கோவிலில் பிரகாரப் புறப்பாடு வரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதன் பின்னர், பம்பை, உடுக்கை, தாரை-தம்பட்டை முழங்க வான வேடிக்கையுடன் மேம்பாலம், பஜார் வீதி வழியாக கரகம் ராள்ளப்பாடி கிராமத்தில் உள்ள ஸ்ரீ கங்கை அம்மன் கோவிலுக்கு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர், கோவில் வளாகத்தில் கும்பம் போடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் பின்னர், மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.பின்னர், பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து தெருக்கூத்து நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், ராள்ளப்பாடி கிராமத்தைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகான ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள், இளைஞர்கள், மகளிர்கள், கிராம முக்கியஸ்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



சேலம் மாவட்டம் தலைவாசம் ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி- ஆராத்தி அக்ரஹாரம் பள்ளிக்கு வரும் மாணவிய மாணவர்களுக்கு தலைமையாசிரியர் ஷண்முகவடிவு தலைமையில் ஆசிரிய பெருமக்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மலர் தூவி மற்றும் இனிப்புகள் வழங்கி வரவேற்பு வழங்கினர்.



சென்னை எண்ணூர் நெட்டுக்குப்பம் முகத்துவாரம் பகுதியில் மீனவர்களின் பல ஆண்டு கால கோரிக்கையாக இருந்த கடல் அரிப்பை தடுக்கவும் தூண்டில் வலைவுகள் அமைத்து முகத்துவாரம் ஆற்றை ஆழப் படுத்துவது உள்ளிட்ட பணிகளை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி பைபர் படகில் சென்று ஆய்வு மேற்கொண்டார். எண்ணூர் நெட்டுக்குப்பம் முகத்துவாரம் பகுதியில் நடைபெற்று வரும் பணிகளை வடசென்னை நாடாளுமன்ற டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கேபி சங்கர், மாநகராட்சி மண்டல குழு தலைவர் தனியரசு, 1 வது வார்டு மாமன்ற"உறுப்பினர் சிவக்குமார் உள்ளிட்டோர் பைபர் படகில் சென்று முகத்துவாரம் ஆற்றை ஆய்வு மேற்கொண்டனர்



காரைக்கால் கோட்டுச்சேரி பூவம் காமராஜ் அரசு உயர்நிலைப் பள்ளியில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா அப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள் இலவச நோட்டுப் புத்தகம் சீருடை மற்றும் தையற்கூலி ஆகியவற்றை மாணவ மாணவிகளுக்கு வழங்கி சிறப்பித்தார்.




புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் கோடை விடுமுறைக்குப் பிறகு அரசு பள்ளிகள் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் நேற்று திறக்கப்பட்ட நிலையில் விடுமுறையில் அரசு மறறும் அரசு உதவி பெரும் பள்ளிகளை தூய்மைப்படுத்தும் பணி, மாணவர்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்விளக்கு, மின்விசிறிகளை சரிபார்த்தல், மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுத்தல் மேலும் பள்ளி மாணவர்கள் பயணிக்கும் இலவச பேருந்து இவை அனைத்தும் அனைத்து பள்ளிகளிளும் செய்து முடிக்கப்பட்டு நேற்று பள்ளிகள் திறக்கப்பட்ட நிலையில் 101 அரசு பள்ளிகளிலும் 7 அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பள்ளி மாணவர்களுக்கு இலவச நோட்டு புத்தகம், சீருடை மற்றும் தையற் கூலி ஆகியன வழங்கும் பணியினை போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா நேற்று காலை நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட குரும்பகரத்தில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் பூவத்தில் அமைந்துள்ள அரசு தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்கள், இந்நிகழ்வில் மேல்நிலை கல்வி துனை இயக்குநர் ராஜேஸ்வரி முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் மற்றும் வட்டம்-I பொன் சௌந்தரராசு குரும்பகரம் பள்ளி முதல்வர் சுப்பிரமணியன் பூவம் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் விஜயராகவன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த ஓடுதுறை பகுதியை சேர்ந்தவர் ஆனந்தன் இவர் கூலி வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் இவரது கூரை வீட்டில் இரண்டு நாட்களுக்கு முன்பு திடீரென்று தீ விபத்து ஏற்பட்டு, குடிசை வீடு முழுவதுமாக சேதம் அடைந்தது. சுமார் 5 லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமானது. இதனை அறிந்த விமல் நற்பணி இயக்கத் தலைவர் விமல் ராஜ் தலைமையில்பாரதிய ஜனதா கட்சியின் சிறுபான்மை பிரிவின் தேசிய செயற்குழு உறுப்பினர் விக்டர் ராயப்பன் உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டு பாதிக்கப்படுபவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களையும் வழங்கினர்.

# சென்னை எண்ணூரில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் அண்ணனை கல்லால் தாக்கியதில் மரணம், தம்பிகள் கைது



எண்ணூர்,ஜூன்,15

சென்னை எண்ணூர் ராமகிருஷ்ணா நகர் மூன்றாவது மெயின் தெருவை சேர்ந்த ஹரிஷ் குமார்(52) இவர் துறைமுகத்தில் ஒப்பந்தம் எடுத்து பணிகள் செய்து வருகிறார் .

நேற்று முன்தினமும் இரவு குடிபோதையில் இருந்த அண்ணன் ஹரிஷ் குமார் மற்றும் அவருடைய தம்பி ஹென்றி குமார் இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டுள்ளது ஹரிஷ் குமார் ஹென்றி குமார் கை விரலை கடித்து உள்ளார் இதில் ஆத்திரமடைந்த ஹென்றி குமார் கீழே இருந்த கல்லை எடுத்து அண்ணன் தலையில் அடித்ததாக கூறப்படுகின்றது.

இதில் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலிசார் காயம் அடைந்த ஹரிஷ் குமாரை மருத்துவமனைக்கு செல்லும்படி கூறினார்கள், ஆனால் மருத்துவமனைக்கு அவர் செல்லாமல் வீட்டின் அருகவே போதையில் உறங்கி விட்டதாக தெரிகிறது. பின்னர் நேற்று காலை எந்திரிச்ச ஹரிஷ் குமார் மூச்சு வாங்குவதாக மனைவி ரூபியிடம் கூறியுள்ளார் உடனடியாக அவரை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற பொழுது அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர் சம்பவம் தொடர்பாக எண்ணூர் போலீசார் வழக்கு பதிவு செய்து தம்பிகள் கிறிஸ்டோபர் மற்றும் ஹென்றி குமார், ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

### ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பள்ளி திறப்பு

# மாணவர்களுக்கு கல்வி எழுது பொருட்களை வழங்கி வரவேற்ற நகர்மன்ற உறுப்பினர்



மயிலாடுதுறை, ஜூன்15-

தமிழகத்தில் கோடை விடுமுறைக்கு பிறகு ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஊழியக்காரன் தோப்பில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் பள்ளி திறப்பையொட்டி முதல் நாள் மாணவர்களை உற்சாகப்படுத்தி வரவேற்கும் விதமாக கார்டுன் வேடம் அணிந்து நபர் மாணவ மாணவிகளுக்கு சாக்லேட் வழங்கியும் தொடர்ந்து பள்ளியில் பயிலும் 150 மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் கஸ்தூரிபாய் செந்தில் தனது சொந்த செலவில் சிலேட், ரப்பர், பென்சில் உள்ளிட்ட எழுது பொருட்களை வழங்கி ஊக்கப்படுத்தி வரவேற்றனர்.

நகர மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி, துணைத் தலைவர் சுப்பராயன் கல்வியாளர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பாபு நேசன் பள்ளி தலைமை ஆசிரியர் ஷகிலா ரத்தினம் ஆகியோர் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

தொடர்ந்து பள்ளி முதல் நாளிலேயே அரசு சார்பில் வழங்கப்பட்ட பாடநூல்கள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டது.

# செம்பனார் கோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் ஜூன் 19ல் பருத்தி ஏலம் தொடக்கம்

செம்பனார்கோவில், ஜூன்- 15:

மயிலாடுதுறை மாவட்டம் நாகை விற்பனை குழு கீழ் இயங்கும் செம்பனார்கோவில் ஒழங்கு முறை விற்பனை கூடத்தில் நெல் குவிண்டால் 1-க்கு ரூ.2,550-க்கும், 250 குவிண்டாலும், தமிழிசை மூவர் எப்.பி.ஒ மூலமாக பச்ச பயறு குவிண்டால் 1-க்கு 7,150க்கும் 30 குவிண்டாலும் தேசிய வேளாண் சந்தை திட்டத்தின் மூலம் பரிவர்த்தணை நடைபெற்றது.

மேலும் நாகை விற்பனை குழு செயலாளர் கூறுகையில் இந்த வருடம் பருத்தி அறுவடை தொடங்கி நல்ல முறையில் நடை பெற்று வருவாதால் விவசாயிகளின் நலன் கருதி செம்பனார்கோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் வரும் 19-ம் தேதி திங்கள்கிழமை திறக்கப்பட உள்ளதாகவும் தேனி, கோவை, கொங்கணாபரம், பெரம்பளூர், விழுப்புரம், திருப்பூர், கும்பகோணம், பகுதி பருத்தி மில் அதிபர்கள் மற்றும் வணிகர்கள் கலந்து கொள்வதால் விவசாயிகள் தங்களின் விளைபொருளை விற்பனை கூடத்திற்கு எடுத்து வந்து நல்ல விலைக்கு விற்று பயன் பெறவேண்டும் என விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

# தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி



தரங்கம்பாடி, ஜூன்- 15:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நடைபெற்றது. மாவட்ட வருவாய் நீதி மன்றம் தனித்துணை ஆட்சியர் ஆர்.வேணு தலைமையில் நடைபெற்ற முகாமில் தரங்கம்பாடி வட்டத்துக்கு உட்பட்ட தலைமையில் நடைபெற்ற முகாமில் தரங்கம்பாடி வட்டத்துக்கு உட்பட்ட கூடலூர், ஈச்சங்குடி, நரசிங்கநத்தம், முத்தூர், அகராதனூர், கடக்கம், கிளியனூர், அகரவல்லம், எடக்குடி, பெரம்பூர், கொடைவிளாகம், திருவிளையாட்டம் , நெடுவாசல், எரவாஞ்சேரி, கொத்தங்குடி, அரசூர், சேத்தூர், விளாகம், நல்லாடை ஆகிய வருவாய் கிராமங்களின் கணக்குகள் சரிபார்க்கப்பட்டது. பல்வேறு கோரிக்கை தொடர்பான மனுக்களை பொது மக்கள் வழங்கினர்.

முகாமில் மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் கா.முருகேசன், தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், தனி வட்டாட்சியர்கள் நாகலட்சுமி, சுந்தரி, வட்ட வழங்கல் அலுவலர் விஜயகுமார், பல்வேறு துறையினர் கலந்துகொண்டனர்.

### மயிலாடுதுறை அருகே 9 வயது சிறுவனுக்கு

# மது ஊற்றி கொடுத்து குடிக்க வைத்ததாக காவல் நிலையத்தில் சிறுவனை தூக்கி கொண்டு வந்து பெற்றோர் புகார்



மயிலாடுதுறை, ஜூன்,15

மயிலாடுதுறை அருகே உள்ள சித்தர்காடு கிராமத்தில் 9 வயது சிறுவனுக்கு இளைஞர் ஒருவர் மது ஊற்றிக் கொடுத்ததாக மயக்க நிலையில் இருந்த சிறுவனை தூக்கிக்கொண்டு மயிலாடுதுறை காவல் நிலையம் வந்து பெற்றோர் இந்திரஜித் புகார் அளித்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த அறிவழகன் என்பவர் தன் மகன் மற்றும் மற்றொரு சிறுவனுக்கு மதுவை ஊற்றி குடிக்க வைத்து உள்ளதாகவும், இதனால் மது போதையில் சிறுவன் மயக்க நிலைக்கு சென்றுள்ளதாகவும். சிறுவனை தூக்கிக்கொண்டு நேரடியாக காவல் நிலையத்துக்கு வந்து பெற்றோர் புகார் அளித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உடனடியாக மயிலாடுதுறை போலீசார் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். சிறுவனுக்கு மது ஊற்றிக்கொடுத்த இளைஞரை காவல்துறையினர் தேடி வந்தனர். இந்நிலையில் தலைமறைவாக இருந்த அறிவழகனை மயிலாடுதுறை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர். மது குடித்ததால் மயக்கம் ஏற்பட்ட சிறுவனுக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் தற்போது அவர் உடல்நலன் தேறி உள்ளார். சிறுவர்களை பெற்றோர்கள் தங்கள் கண்காணிப்பில் வைக்க தவறினால் இது போன்ற விபரீத சம்பவங்கள் அரங்கேறும் என்பதற்கு இச்சம்பவம் ஒரு சான்றாக மாறி உள்ளது.

# உலகின் மிகப்பெரிய சிறுநீரக கல்லை அகற்றி இலங்கை ராணுவ மருத்துவர்கள் உலக சாதனை



கொழும்பு,ஜூன்.15-

உலகின் மிகப்பெரிய சிறுநீரக கல்லை அகற்றி இலங்கை ராணுவ மருத்துவர்கள் உலக சாதனை அகற்றப்பட்ட கல், 13.372 சென்டி மீட்டர் நீளமும், 801 கிராம் எடையும் கொண்டதாக இருந்தது. தற்போதைய சாதனையை கின்னஸ் உலக சாதனைக்கான நிறுவனம் உறுதி செய்தது.

இலங்கையின் ராணுவ மருத்துவர்கள் குழு, உலகிலேயே அதிக எடைகொண்ட சிறுநீரக கல்லை அறுவைசிகிச்சைசெய்து அகற்றி உலக சாதனை படைத்திருக்கின்றனர். இதுவரை இந்திய மருத்துவர்கள் 2004ம் வருடம் அகற்றியிருந்த கல்தான் மிகப்பெரியதாக கணக்கிடப்பட்டிருந்த நிலையில், அந்த சாதனை இப்பொழுது முறியடிக்கப்பட்டுள்ளது. இந்த மாத துவக்கத்தில், கொழும்புவில் உள்ள ராணுவ மருத்துவமனையில் ஒரு நோயாளியிடமிருந்து அகற்றப்பட்ட கல், 13.372 சென்டி மீட்டர் நீளமும், 801 கிராம் எடையும் கொண்டதாக இருந்தது என ராணுவம் தெரிவித்துள்ளது. கின்னஸ் உலக சாதனை பட்டியலில், இதுவரை அகற்றப்பட்ட கற்களிலேயே, இந்தியாவில் 2004ம் வருடம் அகற்றப்பட்ட 13 சென்டி மீட்டர் நீளம் கொண்ட கல்தான் பெரியதாகபட்டியலிடப் பட்டிருந்தது. அதே போன்று, மிக அதிக எடையுள்ளகல்என 2008ம் வருடம் பாகிஸ்தானில் அகற்றப்பட்ட 620 கிராம் கல் பட்டியலிடப்பட்டுள்ளது. இலங்கையின் தற்போதையசாதனையை உறுதி செய்த கின்னஸ் உலக சாதனைக்கான நிறுவனம்,இலங்கையைச் சேர்ந்த கேனிஸ்டஸ் கூங்கே என்பரின் சிறுநீரகத்திலிருந்து 13.372 சென்டிமீட்டர் (5.264 இஞ்ச்)உள்ள ஒருசிறுநீரக கல், கடந்த 1-ம் தேதி அகற்றப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது. ராணுவ மருத்துவமனையின் சிறுநீரகத்துறைதலைவர் டாக்டர் கே.சுதர்சன் தலைமையில், டாக்டர் பதிரத்னா மற்றும் டாக்டர் தமஷா பிரேமதிலகா ஆகியோர் அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர்.

# செந்தில்பாலாஜிக்கு நெஞ்சுவலி ஏற்படும் அளவுக்கு நெருக்கடி தேவையா? அமலாக்கத் துறை நடவடிக்கைக்கு முதல்வர் ஸ்டாலின் கண்டனம்

சென்னை , ஜூன்.15-

"விசாரணைக்கு முழு ஒத்துழைப்புகொடுப்பேன் என்று கூறிய பிறகும், நெஞ்சுவலி ஏற்படும் அளவுக்கு நெருக்கடி கொடுத்து மனிதநேயமற்ற முறையில் பாஜக.,வின் அமலாக்கத்துறை நடந்து கொண்டது கண்டனத்திற்குரியது" என்று அமைச்சர் செந்தில்பாலாஜி விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:

தன் வசம் இருக்கும் விசாரணை அதிகார அமைப்புகள் மூலமாக தனக்கு எதிரான அரசியல் சக்திகளை பாஜக பழிவாங்கும். அவர்களுக்குத் தெரிந்த ஒரேவழிஇதுமட்டும்தான் என்று நான் ஏற்கனவே சொல்லி இருந்தேன். இது மாதிரியான நடவடிக்கைககளை தொடர்ந்துசெய்வார்கள் என்றும் சொல்லி இருந்தேன்.

அமைச்சர் செந்தில் பாலாஜி இல்லத்தில் (ஜீன் -13) நேற்றைய தினம் காலை முதல் அமலாக்கத்துறை சோதனை நடத்தியது. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தந்து வந்தார். இந்த நிலையில் தேவையில்லாத வகையில் அத்துமீறி - அனுமதியின்றி பலவந்தமாக, தமிழ்நாட்டின் பாதுகாப்புதொடர்பான இரகசிய கோப்பு ஆவணங்கள் நிறைந்த தலைமைச்செயலகத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அறைக்குள் நுழைந்து, விசாரணை என்றபெயரால் நாடகம் நடத்தி நேரத்தை கடத்தி இருக்கிறார்கள். தலைமைச் செயலகத்திலேயே புகுந்து ரெய்டு



நடத்துவோம் என்று காட்ட நினைத்திருக்கிறார்கள். இதனைக் கண்டித்து விரிவான அறிக்கையை நான் நேற்று மாலையே கொடுத்துள்ளேன்.

நான் மட்டுமல்ல, அகில இந்திய கட்சித் தலைவர்களும் பல்வேறு மாநில முதலமைச்சர்களும் இதனைக் கண்டித்துள்ளார்கள். ஏனென்றால் இதுமாதிரி பா.ஜ.க. இந்தியாவில் பல மாநிலங்களில் நடந்து வருவதை இந்தியாவின் அனைத்துத் தலைவர்களும் அறிவார்கள். அதுதான் இங்கும் நடக்கிறது.

விசாரணை என்ற பெயரால் நேரத்தை கடத்தி, செந்தில் பாலாஜியை மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் தொல்லைக்குள்ளாக்கி இருப்பதாக தெரிகிறது. நெஞ்சுவலி ஏற்படும் அளவுக்குநெருக்கடியைக் கொடுத்திருக்கிறார்கள்.

நள்ளிரவு 2 மணிவரை இதைச்செய்துஇறுதியாக மருத்துவமனைக்கு அழைத்து வந்துள்ளார்கள். இப்போது அவர் தீவிர சிகிச்சை பிரிவில்தான் இருக்கிறார்.

விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்று சொன்ன பிறகும் சித்ரவதை செய்யும் நோக்கத்துடன் ஏன் செயல்பட வேண்டும்? இந்த வழக்கிற்குத் தேவையான சட்ட நடைமுறைகளை மீறி அமலாக்கத்துறை அதிகாரிகள் இவ்வளவு மனிதநேயமற்ற முறையில் நடந்து கொண்டிருப்பது தேவையா?

அதிகாரிகளை ஏவியவர்களின் குரூர சிந்தனை இதன் மூலம் வெளிப்படுகிறது.

என்ன வழக்கோ அதனை சட்டப்படி செந்தில் பாலாஜி சந்திப்பார்.

எங்களது அரசியல் நிலைப்பாடு எதுவோ அதில்நாங்கள்உறுதியாகத் தொடர்வோம். இந்த வழக்கை சட்ட ரீதியாக தி.மு.க. உறுதியுடன் எதிர்கொள்ளும். பா.ஜ.க.வின் இந்த மிரட்டல்களுக்குஎல்லாம் தி.மு.க. அஞ்சாது. இந்த அடக்குமுறைகளை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். 2024 தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆவுடையார்கோவில் தாசில்தார் அலுவலகத்தில்

# வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர்கள் சங்கம்மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்




ஆவுடையார்கோவில், ஜூன்.15-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாசில்தார் அலுவலகத்தில் நேற்று தமிழ்நாடுவருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர்கள் சங்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர்கள் சங்கமாவட்டத்தலைவர் கருப்பையா தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறையில் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெறும் கிராம நிர்வாக அலுவலர்களைபணியில் இளையோர்களுக்காக இளநிலை வருவாய் ஆய்வாளர் கலைமனிதவள மேம்பாட்டுத்துறை இடம் முதுநிலை தொடர்பாகவிரைவில் தெளிவுரை கோரிபெற வலியுறுத்தியும்., கிராம நிர்வாக அலுவலர்களின் பதவி உயர்வு தொடர்பாக வெளியிட்டஅரசாணை மீது விதி திருத்தங்கள் மேற்கொண்டு திருத்தப்பட்ட அரசாணை வெளியிட வலியுறுத்தியும், பதவி உயர்வு பெறும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மட்டும் பாரபட்சமாக முதுநிலை நிர்ணயம் செய்வதை கைவிட்டு விரைவில் நீதி வழங்கிட வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை வைரம்ஸ் பள்ளியில்

# அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு அமரும் பலகை, எழுதும் மேசை வழங்கும் விழா



புதுக்கோட்டை, ஜூன்.15-

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நேற்று புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா,அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு சுமார் ஏழு இலட்சம் மதிப்புடைய 90 தொகுப்புகள் அமரும் பலகை, எழுதும் மேசை ஆகியவற்றை குலமங்களம் அரசு பள்ளி, காந்தி நகர் அரசு பள்ளி, கலீப் நகர் அரசு பள்ளி, மாலையீடு அரசு பள்ளி, வள்ளுவர் பள்ளி குழிபிறை, டவுன்ஹால் அரசுபள்ளி, சான்ஸ்கிரிப் ஓரியண்டல் பள்ளி புக்கோட்டை ஆகிய பள்ளிகளுக்கு, வைரம்ஸ் பள்ளியின் சார்பாகபள்ளிதலைமை யாசிரியர்களிடம் வழங்கினார்.

இதில் பள்ளியின் தாளாளர் ரகுபதி சுப்ரமணியன், தலைவர் தேனாள் சுப்ரமணியன், பள்ளியின் நிர்வாக உறுப்பினர்கள்,முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

# தென்காசி ஆட்சியரிடம் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் கோரிக்கை மனு



தென்காசி, ஜூன் .15-

தமிழ்மாநிலகாங்கிரஸ் மாநில செயலாளர் சார்லஸ் தலைமையில் மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரனிடம் கோரிக்கை மனுவினை அளித்தனர்,அந்தமனுவில் கடந்த சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் தமிழகத்தில்திமுக ஆட்சி அமைத்தால்மின்கட்டண உயர்வு இருக்காது மின் தட்டுப்பாடு வராது மின்சார விநியோகம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் முந்தைய ஆட்சியில் மின் உற்பத்தி ஊழல் குறித்து விசாரிக்கப்படும்என்றும் அறிவிக்கப்படாத கடும் மின்வெட்டு ஏற்பட்டது தற்பொழுது சிறு குறு தொழில்களுக்கும் வணிக பயன்பாட்டிற்கும் 10% லிருந்து 21% வரை மின் கட்டணம் உயர்த்தப் படுகிறது என திமுக அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது, ஏற்கனவே தமிழகத்தில் வேலை வாய்ப்பு இன்றி மாணவர்கள் இளைஞர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் அதற்கு காரணம் மின் கட்டணம் செலுத்த முடியாமல் தொழில் நிறுவனம் மூடப்பட்டு வருவது முதன்மையான காரணமாகும்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழக அரசு மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது ஏற்கனவே வீட்டு வரி உயர்வால் வாடகை உயர்த்தப்பட்டுள்ள சூழ்நிலையில் தற்போது வணிக முறை மின் கட்டணஉயர்வு வாடகை உயர்த்தும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது இந்த இலவச மின்சார செலவினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளட்டும் இதில் ஆளும் மாநில திமுக அரசுக்கு எந்த பங்கும் இல்லை எனவே பொதுமக்களை வாட்டி வதைக்கும் மின் கட்டண உயர்வினை உடனடியாக கைவிடுமாறு கேட்டுக் கொள்வதாக அதில் கூறப்பட்டுள்ளது, இதில்மாவட்டத் தலைவர் அய்யாதுரை நகரத் தலைவர் வின்செண்ட்உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

## கறம்பக்குடி அரசு மருத்துவமனைக்கு

# கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம்: எம்எல்ஏ சின்னதுரை தலைமையிலான போராட்ட அறிவிப்பு வெற்றி



புதுக்கோட்டை, ஜூன்.15-

கறம்பக்குடி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் நியமிக்கப்பட்டதோடு விஷமுறிவு மருந்து மாத்திரைகளும் வரவழைக்கப் பட்டுள்ளன. இது எம்.சின்னதுரை எம்எல்ஏ தலைமையிலான போராட்ட அறிவிப்புக்கு கிடைத்த வெற்றியாகும்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அரசு தாலுகா மருத்துமனையில் போதிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள், மருந்துப் பொருட்கள் இருப்பதில்லையென அப்பகுதி மக்கள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். தாலுகாவின் தலைநகர் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை ஏதோ அரசு ஆரம்ப சுகாதார நிலையம் போல செயல்படுவதாக கூறப்படுகிறது. இதுகுறித்து தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பலகட்ட முயற்சி எடுத்தும் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லை.

இதனால், கறம்பக்குடி அரசு தாலுகா மருத்துவமனையை 24 மணி நேரமும் மருத்துவர்களோடு செயல்படும் மருத்துவமனையாக தரம் உயரத்த வேண்டும். போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்களை நியமிக்க வேண்டும். விஷமுறிவு மருந்து உட்பட அனைத்து உயிர்காக்கும் மருந்துகளும் போதிய அளவில் இருப்பு வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சின்னதுரை தலைமையில் அனைத்துக் கட்சியினர் சார்பில் கடந்த 07.06.2023 அன்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடந்த 06.06.2023 அன்று கோட்டாட்சியர் முருகேசன் தலைமையில் கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதானப் பேச்சுவரத்தை நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் 13.06.2023-க்குள் 5 மருத்துவர்களைக் கொண்டு 24 மணிநேரமும் செயல்படுத்துவது, கூடுதலாக செவிலியர்களை நியமிப்பது, போதிய மருந்துகளை இருப்பு வைப்பது என அதிகாரிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னதுரை தலைமையில் கறம்பக்குடி பேரூராட்சித் தலைவர் உ.முருகேசன், காங்கிரஸ் வட்டாரத் தலைவர் ஞானசேகரன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் நியாஸ், சின்னத்தம்பி, வர்த்தக சங்கத் தலைவர் ஜெகன்நாதன், சிபிஎம் மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.பொன்னுச்சாமி, ஒன்றியச் செயலாளர் பி.வீரமுத்து, மஜக மாவட்டச் செயலாளர் முகமதுஜான் உள்ளிட்டோர் நேற்று மருத்துவமனைக்கு சென்று ஆய்வு மேற்கொண்டனர். அப்போது கோட்டாட்சியர் முருகேசன், வட்டாட்சியர் ராமசாமி, மருத்துவ அலுவலர் மகேஸ்வரி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஏற்கனவே இருந்த 3 மருத்துவர்களில் 2 பேர் விடுமுறையில் சென்று இருந்தனர். விடுமுறையில் இருந்த ஒருவர் மீண்டும் பணிக்கு வந்துவிட்டார். கூடுதலாக 2 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது அங்கு 4 பேர் பணியில் உள்ளனர். விடுப்பில் உள்ள ஒருவர் விரைவில் வந்துவிடுவார் என்று தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே உள்ள 4 செவிலியர்களுடன்கூடுதலாக 2 பேர் நியமிக்கப்பட்டு மொத்தம் 6 செவிலியர்கள் பணியமர்தப்பட்டனர். நாய்கடி, பாம்பு கடி ஊதிய மற்றும் மருந்து மாத்திரைகளை போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், மருத்துவமனை வளாகத்தில் மண்டிக்கிடந்த புதர்கள் அகற்றப்பட்டு தூய்மைப்படுத்தப் பட்டிருந்தது.

மருத்துவமனை வளாகத்தை முழுமையாக ஆய்வுசெய்த சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

# கேரளாவிற்கு கனிம வளங்கள் செல்வதை கண்டித்து தேமுதிகவினர் ஆட்சியரிடம் கோரிக்கை மனு



தென்காசி, ஜூன்.15-

தமிழ்நாட்டில்இருந்து கேரளாவிற்கு கனிம வளங்கள் கொண்டு செல்வதை கண்டித்து மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரனிடம், தேமுதிக தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் பழனி சங்கர் தலைமையில் மனு அளித்தனர். அந்த மனுவில் தென்காசி-ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் இருந்து தினசரி கேரளாவிற்கு 36 வீல் கொண்ட லாரிகளில் லாரி ஒன்றில் 50 டன் கனிம வளங்கள் சென்றன, தினசரி 3000 லாரிகள் செல்கின்றன.

நான்கு மாதங்களில் சுமார் ஒருகோடி என்பது லட்சம் டன் கனிம வளங்கள் கேரளாவிற்கு செல்கின்றன ஆலங்குளம் சட்டமன்றத்தொகுதியில் உள்ள கல் குவாரி கிரசர் மூலமாகசுமார் 800 கோடி ரூபாய் இழப்பீடு செய்த குவாரிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது ஐஏஎஸ் அதிகாரியை கொண்டு ஆய்வு செய்ய வேண்டும், ஒரு கோடி என்பது லட்சம் டன் கற்கள் கேரளாவிற்கு சென்றதை முறைப்படி அனுமதி இல்லாமல் தமிழக அரசுக்கு சுமார் 800 கோடி இழப்பீட்டுக்கு காரணமாக இருந்த மாவட்ட கனிம வள துறை அதிகாரி மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து அவரை பணி நீக்கம் செய்து அவரிடம் இருந்து சுமார் 800 கோடி பெற வழிவகை செய்ய வேண்டும், கேரளாவிற்கு செல்லும் கனிமவளங்கள் முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும்.

தென்காசி ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கல் குவாரி அனுமதியின்றி அளவிற்கு அதிகமான கல் எடுத்த குவாரிகள் இழுத்து மூடக்கோரி விரைவில் தலைமை கழகம்சார்பாககல்குவாரி முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது, இதில் மாவட்டப் பொருளாளர் சந்துரு சுப்பிரமணியன், தலைமை செயற்குழு உறுப்பினர் முப்புடாதிமுத்து, ஒன்றிய செயலாளர்கள் வேலாயுத பாண்டியன், ரவிச்சந்திரன், உதயகுமார், வேதக்கண்ணு ரங்கசாமி, நகரச்செயலாளர் பேச்சி, கேப்டன் சாமி, வி எம் சாமி, காமராஜ் மோகன், ராஜேந்திரன் என்ற தாசன், ஜார்ஜ், கணேசன், ரவி, சண்முகம் சேட், செல்வம், உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மோசடி வழக்கில் கைதான செந்தில் பாலாஜி அமைச்சரவையில் மாற்றம்

# சரக்கு வாகனத்தில் கஞ்சா : புதுகை போலீசாருக்கு தண்ணி காட்டிய கும்பல்





# செந்தில் பாலாஜியை காவலில் விசாரிக்க கோரி அமலாக்கத்துறை மனு இன்று: விசாரணை


சென்னை / புதுக்கோட்டை | 15.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கிருஷ்ண சுவாமி அய்யர் , இந்திய வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் (பி.1863) (இ.1911)



மணவை முஸ்தபா , தமிழகத் தமிழறிஞர் (பி.1935) (இ.2015)



ப. தங்கம் , தமிழக ஓவியர் (பி.1937)



டி. ஆர். பாலு , இந்திய அரசியல்வாதி (பி.1941)



## இன்றைய நினைவு நாள்

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி , இந்திய வரலாற்றாளர், திராவிடவியலாளர் (பி.1892) (இ.1975)



டி. எஸ். இராமஸ்வாமி பிள்ளை , தமிழக அரசியல்வாதி (பி.1918) (இ.2006)



சோமவன்ச அமரசிங்க , இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி.1943) (இ.2016)



## உலகக் காற்று நாள்